


# தி.மு.க. இளைஞர் அணி

## மாவட்ட அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நியமிக்கப்பட்ட நிலையில், தற்போது கழக மாவட்டங்கள் புதிதாகப் பிரிக்கப்பட்டதால் ஏற்பட்ட காலியிடங்களுக்கும், பொறுப்பு உயர்வு பெற்ற நிர்வாகிகளுக்கு மாற்றாக நிரப்பப்படாமல் இருக்கும் காலியிடங்களுக்கும் புதிய நிர்வாகிகள் நியமிக்கப்படுகின்றனர்.

அந்த வகையில், இளைஞர் அணியின் முதல் நான்கு மண்டலங்களுக்கு உட்பட்ட மாவட்டங்களில் உள்ள காலிப் பணியிடங்களுக்கு விண்ணப்பித்திருந்த நிர்வாகிகள் நேர்காணல் அடிப்படையில், உரிய பரிந்துரைகளுடன் கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரிலும், தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடனும் கீழ்க்கண்டவாறு நியமிக்கப்படுகின்றனர். ஏற்கெனவே நியமிக்கப்பட்ட நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

### சென்னை தெற்கு மாவட்டம்

**துணை அமைப்பாளர்கள் :** (1) ம.ஸ்ரீகாந்த், 22, பிள்ளையார் கோயில் தெரு, பெருங்குடி, சென்னை. (2) ஆர்.கே.சந்திரேஷ், 66/36, வால்மீகி தெரு, திருவான்மியூர், சென்னை. (3) த.அசோக்குமார், 12/5, தெற்கு கணேசன் தெரு, ராஜீவ் காந்தி நகர், நெசப்பாக்கம், கலைஞர் கருணாநிதி நகர், சென்னை.

### திருவள்ளூர் கிழக்கு மாவட்டம்

**துணை அமைப்பாளர் :** ஆர்.தில்லைகுமார், 110, சிவன் கோயில் தெரு, வடதில்லை, மாம்பாக்கம், ஊத்துக்கோட்டை, திருவள்ளூர்.

### விழுப்புரம் தெற்கு மாவட்டம்

**அமைப்பாளர் :** ராயல் எஸ்.அன்பு, 20, வ.உ.சி.தெரு, அரகண்டநல்லூர், கண்டாச்சிபுரம், விழுப்புரம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) மு.பாலகிருஷ்ணன், 501, ஆரூர் சாலை, பொன்னங்குப்பம், விக்கிரவாண்டி, விழுப்புரம். (2) அ.விஜயராகவன், 64–ஏ, நடுத்தெரு, தாசர்புரம், திருக்கோவிலூர், விழுப்புரம். (3) கா.நிர்மல்ராஜ், வடக்குத் தெரு, தடுத்தாட்கொண்டூர், திருவெண்ணெய்நல்லூர், விழுப்புரம். (4) சி.பாரதி, வா.பகண்டை, வாக்கூர், விக்கிரவாண்டி, விழுப்புரம்.

### விழுப்புரம் மத்திய மாவட்டம்

**துணை அமைப்பாளர்கள் :** (1) செ.மணிகண்டன், 25, ஜி.ஆர்.பி. தெரு, விழுப்புரம். (2) வீ.வீரா (எ) வீரமணி, 433, டாக்டர் கலைஞர் இல்லம், பொய்யப்பாக்கம், விழுப்புரம். (3) இரா.இராஜசேகர், 298, நடுத்தெரு, சுந்தரிபாளையம், வி.அகரம், விழுப்புரம்.

### கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம்

**துணை அமைப்பாளர் :** கோ.முருகன், 46, வள்ளலார் நகர், சங்கராபுரம், கள்ளக்குறிச்சி.

### கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டம்

**துணை அமைப்பாளர் :** வீஎஸ்.மணி (எ) மணிகண்டன், எஃப்–3, ராயல் அபார்ட்மெண்ட், அண்ணா நகர், கள்ளக் குறிச்சி.

### கடலூர் மேற்கு மாவட்டம்

**துணை அமைப்பாளர் :** உ.செந்தில்குமார், 74, தெற்குத் தெரு, கீழ்மாம்பட்டு , பண்ருட்டி, கடலூர்.

### கடலூர் கிழக்கு மாவட்டம்

**துணை அமைப்பாளர்கள் :** (1) சி.மரியா மார்ட்டின், 5, 5–வது தெரு, புதுநகர், குறிஞ்சிப்பாடி, கடலூர். (2) அ.ஜெகன், 86/6, சித்தி விநாயகர் கோயில் தெரு, மஞ்சக்கொல்லை, புவனகிரி, கடலூர். (3) இள.விஜயராகவன், கள்ளத் தெரு, மோவூர், காட்டுமன்னார்கோவில் கடலூர்.

### வேலூர் வடக்கு மாவட்டம்

**அமைப்பாளர் :** ரா.டீட்டா சரவணன், 14/10, அண்ணா தெரு, மதி நகர், களிஞ்சூர், வேலூர்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) கோ.முரளி பாஸ்கர், 1/21, வள்ளிமலை சாலை, பள்ளிக்குப்பம், வேலூர். (2) சி.எழில் குமார், 112, பிள்ளையார் கோயில் தெரு, கொடுக்கந்தாங்கல், விண்ணம்பள்ளி, காட்பாடி, வேலூர். (3) தி.பூ.சரவணன், 58/1, எம்.பி.டி.சாலை, பொன்னை கூட்டுரோடு, திருவலம், காட்பாடி, வேலூர். (4) வி.பிரபு, 1/43, பிள்ளையார் கோயில் தெரு, அன்னங்குடி, இலத்தேரி, கே.வி.குப்பம், வேலூர்.

### வேலூர் தெற்கு மாவட்டம்

**துணை அமைப்பாளர்கள் :** (1) ப.விஸ்வநாத், 441, நாயுடு தெரு, மசிகம், பேர்ணாம்பட்டு, குடியாத்தம், வேலூர். (2) சி.திவாகர் (எ) ராகுல், 153, நடுத்தெரு, பலவன்சாத்துக்குப்பம், வேலூர். (3) கி.விஜய், 293, கடை வீதி, அணைக்கட்டு, வேலூர். (4) க.சையத் கெளஸ், 22/24 , கோஷாகுலம் மொய்தீன் தெரு, தரணம்பேட்டை, குடியாத்தம், வேலூர்.

### திருப்பத்தூர் மாவட்டம்

**துணை அமைப்பாளர் :** மு.சரண்ராஜ், வளையல்காரத் தெரு, ஆம்பூர், திருப்பத்தூர்.

### திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்

**துணை அமைப்பாளர் :** ஆ.தமிழ்க்குடிமகன், 242, மடம் மேல் நகர், மேல் நகர், திருவண்ணாமலை.

### தருமபுரி மேற்கு மாவட்டம்

**துணை அமைப்பாளர்கள் :** (1) எல்.மணிவண்ணன், 4/50/1, சாமனூர், பாலக்கோடு, தருமபுரி. (2) ப.கார்த்திக் அமர்நாத், மாயா பஜார் தெரு, பாப்பிரெட்டிப்பட்டி, தருமபுரி.

### சேலம் மத்திய மாவட்டம்

**துணை அமைப்பாளர் :** (1) ரா.ரவி, மகிழகம், அபிராமி கார்டன் செல்லும் வழி, கீழ் போர்டு, பெரிய மோட்டூர், சேலம்.

### சேலம் கிழக்கு மாவட்டம்

**துணை அமைப்பாளர் :** (1) த.வரதராஜன், 162, கோபாலபுரம், பெத்தநாயக்கன்பாளையம், சேலம்.

### ஈரோடு வடக்கு மாவட்டம்

**துணை அமைப்பாளர்கள் :** (1) து.இந்துகுமார், 1/180, இந்திரா நகர், கொத்தமங்கலம், சத்தியமங்கலம், ஈரோடு. (2) கே.எம்.விஜயகுமார், 12/186, மில்மேடு, உக்கரம், சத்தியமங்கலம், ஈரோடு.

### ஈரோடு மத்திய மாவட்டம்

**அமைப்பாளர் :** சன் சுரேஷ் (எ) பி.ஜி.சுரேஷ்குமார், 765, பெரிய புலியூர், பவானி, ஈரோடு.

**துணை அமைப்பாளர்கள் :** (1) எஸ்.நவநீதன், 93/1, கள்ளுக்கடைத் தோட்டம், செம்படாபாளையம், பூனாச்சி, அந்தியூர், ஈரோடு. (2) ரா.ராஜேஷ், 3/335–ஹெச், பசுமை பார்க், பள்ளக்காட்டூர், சுள்ளிப்பாளையம், பெருந்துறை, ஈரோடு. (3) எம்.எம்.குமார், 3/308, சூரநாயக்கனூர், சீனாபுரம், பெருந்துறை, ஈரோடு. (4) ஏ.பழனிசாமி, 253, மேட்டூர் பிரதான சாலை, சித்தாறு, பவானி, ஈரோடு. (5) து.குணசேகரன், 40, சொக்கநாதமலையூர், பட்லூர், அந்தியூர், ஈரோடு.

அன்பகம்
சென்னை – 18
நாள் : 28–01–2026

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்
தி.மு.க. இளைஞர் அணி

# கம்பரசம் பேட்டை நீர்உந்து நிலையத்தில் ஆய்வு!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேரில் மேற்கொண்டார்!

திருச்சி, ஜன.30-

பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டத்தினை பார்வையிட்ட அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி புதிதாக இணைக்கப்பட்ட திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பகுதிகளுக்கு குடிநீர் அபிவிருத்தி திட்டம் செயல்படுத்துதல்,



திருச்சிராப்பள்ளி மாநகராட்சியுடன் 2011ல் சேர்க்கப்பட்ட திருவெறும்பூர் பேரூராட்சி, பாப்பாகுறிச்சி ஊராட்சி, எல்லக்குடி ஊராட்சி, கீழகல்கண்டார் கோட்டை ஊராட்சி மற்றும் ஆலத்தூர் ஊராட்சி, ஆகிய பகுதிகள் அடங்கிய 5 பழைய வார்டு (61, 62, 63, 64 மற்றும் 65) பகுதிவாழ் பொதுமக்களுக்கு CPHEEOன் நெறிமுறைகளின்படி நாள் ஒன்றுக்கு, நபர் ஒன்றுக்கு 135 லிட்டர் வீதம் குடிநீர் வழங்குவதற்கு. ஜெர்மானிய வங்கி நிதி உதவியின் கீழ் (KfW) ரூ.63.70 கோடி மதிப்பீட்டில் பணிகள் எடுத்து கொள்ளப்பட்டு,

தொகுப்பு எண்.1ன் கீழ் காவேரி ஆற்றுப்படுகையில், புதிதாக 6.0மீ விட்டமுள்ள 18.0 மீ ஆழமுள்ள தலைமை நீர்சேகரிப்பு கிணறு கட்டப்பட்டுள்ளது.

மேற்படி நீரேற்று நிலையத்திலிருந்து வார்டு எண்.38, 39, 40, 41, 42, 43 ஆகிய பகுதிவாழ் பொதுமக்களுக்கு 27.27 MLD குடிநீர் வழங்கும் 38.00 இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டி பாரி நகர் (8.00 LL), புகழ் நகர் (5.00 LL), எல்லக்குடி (பழையது) (1.00 LL), காவேரி நகர் (5.00 LL), சந்தோஷ் நகர் (8.00 LL), ஆலத்தூர் (2.00 LL), கணேஷ் நகர் (8.00 LL), அம்பேத்கர் நகர்(1.00 LL) மற்றும் பழைய 3 எண்ணிக்கைகள் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளிலிருந்து குடிநீர் வழங்கும் வகையில் 211.711 கி.மீ குடிநீர் விநியோக குழாய்களும், 21.556 கி.மீ பிரதான குடிநீர் உந்துக் குழாய்களும் பதிக்கப்பட்டுள்ளது. இதுநாள் வரை இத்திட்டத்திற்கு ரூ.64.95 கோடி செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் 19343 வீட்டு குடியிருப்பு குடிநீர் இணைப்புகள் வழங்க வழிவகை செய்யப்பட்டு, 88054 மக்கள் பயன் பெற உள்ளனர்.

இந்நிகழ்வின் போது மாநகரக் கழக செயலாளர் மாநகராட்சி சேர்மன் மு.மதிவாணன் மாவட்டத் துணைச் செயலாளர் செங்குட்டுவன் மாநில அணி நிர்வாகி செந்தில், பகுதி கழகச் செயலாளர் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் நீலமேகம், சிவக்குமார், மாமன்ற உறுப்பினர் தியாஹுதீன், வட்டக் கழக செயலாளர் கயிலை நாதன், புண்ணியமூர்த்தி,ஐ.செல்வராஜ்,சிவசக்தி கார்த்தி, தமிழ்மணி, மன்சூர்அலி, மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் உடன் இருந்தனர்.



கரூர் கலைஞர் அறிவாலயத்தில், கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த மொழி போர்த் தியாகிகள் மற்றும் மறைந்த தியாகிகளின் குடும்பங்களுக்கு, அவர்களது தியாகத்தை போற்றும் வகையில், கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. பொற்கிழிகளும் பரிசும் வழங்கினார். இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் உடனிருந்தனர்.

### கரூர் மாவட்டத்திற்கு ரூ. 4500 கோடி மதிப்பீட்டில் வளர்ச்சி திட்ட பணிகளை முதலமைச்சர் வழங்க உள்ளார்!

# மாவட்ட அளவிலான கலைத்திருவிழாப் போட்டிகள்!

## கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி பரிசுகள் வழங்கினார்!

கரூர், ஜன.30-

கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாக அரங்கில் நடைபெற்ற விழாவிற்கு கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல் தலைமை வகித்தார். கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில்பாலாஜி, வெற்றி பெற்ற மாணாக்கர்களுக்கு பாராட்டு சான்றிதழ்கள் மற்றும் கோப்பைகளை வழங்கினார். பின்னர் அவர் பேசியதாவது:

முதலமைச்சர் முக.க.ஸ்டாலின் அவர்கள் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களை எதிர்காலத்தில் சிறந்த வல்லுநர்களாக உருவாக்குவதற்கு பல்வேறு திட்டங்களை அறிவித்து அதற்கான நிதிகளை ஒதுக்கி செயல்படுத்தி வருகிறார்கள். அரசுப் பள்ளியில் பயில்வது பெருமை என்ற நிலையை உருவாக்கி உள்ளார்கள்.

அந்த வகையில் பள்ளிக் கல்வித் துறையின் சார்பில் பள்ளி மாணவர்களின் கலைத்திறமைகளை வெளிக் கொண்டுவருவதற்கு ஏதுவாக ஓவியம் வரைதல். களிமண் சிற்பம் செய்தல். மணல் சிற்பம். நாட்டுப்புறப் பாடல், கர்நாடக இசை. மெல்லிசை மற்றும் வாத்தியக் கருவிகள் வாசித்தல், பரதநாட்டியம். கரகாட்டம். ஒயிலாட்டம். தப்பாட்டம் மற்றும் குழு நடனம் உள்ளிட்ட போட்டிகள் நடத்தப்படுகிறது.

முதலமைச்சர் அவர்கள், கரூர் மாவட்டத்தைப் பொறுத்தவரை, தனி கவனம் செலுத்தி, அரசு வேளாண்மைக் கல்லூரி, அரவக்குறிச்சியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர்திருமாநிலையூரில் புதிய பேருந்து நிலையம். நெரூர் பகுதியில் ரூ. 101 கோடி மதிப்பீட்டில் காவிரி ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம், ரூ.40 கோடி மதிப்பீட்டில் குளித்தலையில் அரசு மருத்துவமனையை மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்தியும். அதற்கான கட்டிடத்திற்கான திதிகளைக் கொடுத்து அந்தப் பணிகளை விரைவில் முதலமைச்சர் திறந்து வைக்கவுள்ளார்கள்.

தரகம்பட்டியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கான கட்டிடத்தை திறந்து வைத்துள்ளார்கள். இந்த நான்கரை ஆண்டுகளில் கரூர் மாவட்டத்தில் மட்டும் 4500 கோடி ரூபாய் அளவிற்கான வளர்ச்சித் திட்டங்களைத் தந்தவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். இந்தியாவில் தமிழ்நாடு அனைத்துத் துறைகளிலும் முதலிடம் என்ற அளவிற்கு தமிழ்நாட்டை தன்னுடைய உழைப்பால் உயர்த்தி உள்ளார்கள்.

முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டுதலில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள். இந்தியாவினுடைய விளையாட்டின் தலைநகராக தமிழ்நாட்டை மாற்றிக் காட்டக் கூடிய வகையில், நான்கு ஆண்டுகளில் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று வென்ற விளையாட்டு வீரர்கள். வீராங்கனைகள் ஏறத்தாழ 200க்கும் மேற்பட்டோருக்கு அரசுப் பணிகளை வழங்கி, அவர்களுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்துள்ளார்கள்.

கலைத் திருவிழாவில் பங்கேற்று தங்களுடைய திறமை வாயிலாக பரிசுகளைப் பெறுகின்ற அத்தனை மாணவ, மாணவிகளுக்கும். உங்கள் சகோதரனாக இருந்து வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு செந்தில் பாலாஜி பேசினார்.

கரூர் மாவட்டத்திலுள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் 540 பள்ளிகளில் பயிலும் 1.703 மாணாக்கர்கள் கலைத்திருவிழா போட்டிகளில் பங்கேற்றனர். அப்போட்டிகளில் வெற்றி பெற்ற 975 மாணாக்கர்களுக்கு பாராட்டுச்சான்றிதழ்கள் மற்றும் கோப்பைகளை செந்தில்பாலாஜி வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர்.கு.விமல்ராஜ். கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர்.க.சிவகாமசுந்தரி, துணை மேயர் ப.சரவணன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் .ராஜீ, ஆசிரியர்கள். மாணவர்கள் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட மாணவரணி சார்பில் மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக் கூட்டத்திற்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் ஜெயேந்திரன் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் ராமச்சந்திரன் வரவேற்புரை ஆற்றினார். பொதுக்கூட்டத்தில் மொழிப்போர்த் தியாகி தனபால் அவர்களுக்கு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் மதியழகன், அயலக அணி தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி ஆகியோர் மாலை மற்றும் பொன்னாடை அணிவித்து பரிசுத் தொகை வழங்கி சிறப்புரை ஆற்றினார்கள். கூட்டத்தில் செங்குட்டுவன், சுகவனம் , வெற்றிச்செல்வன் , நாகராஜ் , கௌதம், ஹரிஹரன், உமாவதி சத்யராஜ் , மணிபாரதி உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.